நிச்சயமாக சேர்த்துக் கொள்ளப்படும் என்று கனம் அமைச்சர் அவர்கள் உறுதி கூறுவார்களா? இது தவிர இந்தத் திட்டத்தினுல் ஏற்படக் கூடிய பலன் என்ன?

THE HON. SRI P. KAKKAN: இந்தத் திட்டத்தினுல் 10,000 ஏக்கருக்கு தண்ணீர் கொடுக்கலாம் என்று பரிசீலனை செய்திருக்கிருர்கள். இதற்கு கிட்டத்தட்ட 199 லட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதை ஏற்கெனவே கனம் நிதி அமைச்சர் அவர்கள் போய்ப்பார்த்திருக்கிருர்கள். டாக்டர் சுப்பராயன் அவர்கள்கூட இந்த ஏரியாவைப் பார்த்திருக்கிருர்கள். அவர்களும் இது அவசியமான திட்டம் என்று சிபார்சு செய்திருக்கிருர்கள். கவர்னர் அவர்கள் அங்கு சென்றிருந்தபோது அங்குள்ள விவசாயிகள் இதைப்பற்றிச் சொல்லியிருக்கிருர்கள். அரசாங்கம் இதையெல்லாம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிருர்கள். மற்ற திட்டங்களைப்பற்றி முடிவு எடுக்கும்போது இந்தத் திட்டத்திற்கும் முடிவு எடுக்கப்படும்.

SRI S. NAGARAJA MONIGAR: எங்கள் சேலம் ஜில்லாவில் பிரஸ்தாபிக்கப்பட்ட திட்டங்களுடன் இன்னும் சின்னுறு, தொப்பையாறு, வாணியாறு முதலிய முக்கியமான திட்டங்கள் பல வருஷங்களாக நிறைவேற்றப்படாமல் பாக்கி இருக்கின்றன. இந்தப் பிரஸ்தாப திட்டங்களைப்பற்றியெல்லாம் கனம் அன்பர் அவர்கள் இந்த நேரத்திலே கேள்வி கேட்டிருப்பது வரவேற்கத்தக்கது. இதை முன்னமேயே கேட்டிருந்தால் மற்ற திட்டங்களுடன் இந்தத் திட்டத்தையும் சேர்த்துக்கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். கனம் அன்பர் அவர்கள் இதுமாதிரி பொதுவான விஷயங்களைப் பற்றி கேள்வி கேட்டுக்கொண்டே இருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

THE HON. SRI P. KAKKAN: சின்னுறு, தொப்பையாறு முதலிய திட்டங்களையும் பரிசீலனை செய்துகொண்டுதான் இருக்கிருர்கள்.

Wages for workers

*2125 *Q.*—S. M. ANNAMALAI: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தொழிலாளர்களுக்கு உற்பத்திக்கேற்ற ஊதியம் தரும் உத்தேசமுண்டா?

(இ) அப்படியானுல், அதன் விவரமென்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (அ) தற்போது ஊதியம் நிர்ணயிக்கப்படும் முறைகளில் மாறுதல் ஒன்றும் உத்தேசிக்கப்படவில்லை.

(இ) எழுவில்லை.

SRI S. M. ANNAMALAI: சார், தொழிலாளர்கள் உற்பத்தி செய்யக்கூடிய அளவிற்கு அவர்கள் ஊதியத்தை உயர்த்துவதனுல் அவர்களுடைய வேலைத்திறன் மேலும் உயருமாதலால், இதைப் பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

7th December 1961]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த விஷயத்தைக் கூட பரிசீலனை செய்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

SRI V. K. KOTHANDARAMAN : உற்பத்திக்கு ஏற்றவாறு ஊதியம் கொடுப்பதற்கில்லை என்று சொன்னார்கள். இப்பொழுது விலைவாசிகள் உயர்ந்துகொண்டே போவதனால் நியாயமான கூலியை அப்போதைக்கப்போது மாற்றுவதற்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அது வேறு விஷயம். அப்போதைக்கப்போது பரிசீலனை செய்து அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் வருகிறோம்.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, தொழில் துறையிலே தொழில் நிலையங்களில் உள்ள தொழிலாளர்கள் உற்பத்தி பெருக்குவதன் அடிப்படையிலே முதலீட்டிலிருந்து பங்கு கொடுக்க அரசாங்கம் வழிவகை செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்போதைக் கப்போது பரிசீலனை செய்துக்கொண்டுதான் இருக்கிறோம்.

SRI M. K. MARIAPPAN : எந்தெந்த தொழில் செய்கிறவர்கள் சர்க்கார் தொழிலாளர் லிஸ்டில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : உழைக்கிறவர்கள் எல்லாம் தொழிலாளர்கள்தான்.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : நெசவாளர்கள் பட்டியலையும் தொழிலாளர் பட்டியலில் சேர்த்து அவர்களுடைய கூலியை உயர்த்துவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எந்தப் பட்டியலைப் பற்றி குறிப்பிடுகிறார்கள் என்று புரியவில்லை. நெசவாளர்கள்கூட தொழிலாளர்கள்தான்.

Sub-jail, Ulundurpet

* 2126 *Q.*—SRI A. A. RASHEED (on behalf of SRI M. KANDASAMI PADAYACHI) : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உளுந்தூர்பேட்டை சப்-ஜெயிலில் 15 பேர் அடைக்கக் கூடிய அறையில் 45 பேர்களை அடைக்கிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

(இ) அப்படியிருப்பின், அங்கு மேற்கொண்டு இடவசதி செய்யும் உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) & (இ) Yes, Sir.